பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 13 | செவ்வாய்கிழமை 30.10.2018 | கதிர் 358

**இனி இது இரகசியம் அல்ல!**

கைக்கெட்டினாலும் வாய்க்கு எட்டவில்லை என்று சொல்லுவார்கள்.

அந்தநிலைமைதான் செல்வம் அடைக்கலநாதனுக்கு.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தற்போதைய எம்.பிக்கள், எம்.பிக்களாக இருந்தவர்கள் பலருக்கு கனடா அனுமதி பக்கம் 02

# சர்வாதிகார ஆட்சியை அனுமதிக்க முடியாது




## ரணில் நேற்றுத் திட்டவட்டம்

கொழும்பு,ஒக்ரோபர் 30

"அரசமைப்புக்கு முரணான, சர்வாதிகார ஆட்சியை எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க முடியாது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நாடாளுமன்றத்திலேயே தீர்வு உள்ளது. அதனால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறும் சபாநாயகரிடம் வலியுறுத்துகின்றேன்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்காக அலரிமாளிகையில் நேற்றுத் தாம் ஆற்றிய சிறப்பு உரையின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். பக்கம் 11

## நேரில் களமிறங்கிய அமெ., ஐ.நா. சபாநாயகருடன் அவசரச் சந்திப்பு



கொழும்பு,ஒக்.30

இலங்கையில் அரசுக்கு யார் தலைமையேற்பது என்பதை உறுதி செய்யும் பொறுப்புக்களை நிறைவேற்ற உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அமெரிக்க பக்கம் 11

## ஜனாதிபதிக்கு அமெரிக்கா அழுத்தம் நாடாளுமன்றை உடன் கூட்டுமாறு

கொழும்பு,ஒக்.30

இலங்கை நிலைவரங்கள் குறித்து கரிசனையுடன் கவனித்து வருவதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கா, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அழுத்தம் கொடுத்துள்ளது. பக்கம் 11

## ஒருங்கிணைப்புக் குழுவை கூட்ட வலியுறுத்துகிறார் ஷெலோ ஸ்ரீகாந்தா

"தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அதியுயர் பீடமான ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டியே ஆராய்ந்து முடிவு செய்ய பக்கம் 11

## அர்ஜுன கைதாகிப் பிணை! மைத்திரி-மஹிந்த கூட்டு வேட்டை



கொழும்பு,ஒக்.30

பெற்றோலிய வளத்துறை முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

அவர் கொழும்பு பிரதம நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார். பக்கம் 11

## அரசமைப்பின்படி செயற்படுமாறு இலங்கைக்கு ஐ.நா. அறிவுரை



கொழும்பு,ஒக்.30

இலங்கை நிலைவரங்கள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ள ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குரெரெஸ், அரசமைப்பு விதிகளை பின்பற்றுமாறு இலங்கை பக்கம் 11

## பிரதமராகக் கடமைகளை பொறுப்பேற்றார் மஹிந்த



கொழும்பு,ஒக்.30

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 22ஆவது பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பிரதமர் செயலகத்தில் அவர் தமது பக்கம் 11

## நாடாளுமன்றைக் கூட்டுமாறு ஜே.வி.பியும் நேற்றுக் கடிதம்

கொழும்பு,ஒக்.30

நாட்டின் தற்போதைய அரசியல் குழப்ப நிலைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் ஜே.வி.பி வேண்டுகோள் விடுத்துள்ளது. பக்கம் 11

## ரணிலை ஏமாற்றிய வடிவேல் சுரேஷ் இராஜாங்க அமைச்சராக பதவியேற்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், தனது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு டிமிக்கிவிட்டு மஹிந்தவுக்கு ஆதரவை வழங்கினார். பக்கம் 11

## அலரி மாளிகையில் ரவி! ரணிலுடன் முக்கிய பேச்சு

கொழும்பு,ஒக்.30

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று நண்பகல் அலரி மாளிகைக்குச் சென்றார்.

தனது ஆதரவாளர்களுடன் அலரி பக்கம் 11

## பதவியேற்றது புதிய அமைச்சரவை நிதி, பொருளாதாரம் மஹிந்தவிடம்

கொழும்பு,ஒக்.30

12 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் இருவரும் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றனர்.

இதன்படி பிரதமர் மஹிந்தவிடம் பக்கம் 02

## வசந்த சேனநாயக்கவும் டிமிக்கி

கொழும்பு,ஒக்.30

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க மீண்டும் கட்சி தாவி அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பக்கம் 11

## நாடாளுமன்றை உடன் கூட்ட 126 எம்.பிக்கள் கையொப்பம்

### இன்று அவசர கட்சித் தலைவர்கள் கூட்டம்

கொழும்பு,ஒக்.30

நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு வலியுறுத்தி 126 எம்.பிக்கள் கையொப்பமிட்ட கடிதம் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்பட் பக்கம் 11

## வீட்டுக்குள் புகுந்து வாள்வெட்டு ஒருவர் சாவு! மூவர் படுகாயம்!!

### குடத்தனையில் அதிகாலை பயங்கரம்

(எஸ்.நிதர்ஷன்)

குடத்தனைப் பகுதியில் அதிகாலை வேளை வீடுகளுக்குள் புகுந்த நபர் ஒருவர் வீடுகளில் உறக்கத்தில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற் பக்கம் 11

## அரசியல் நெருக்கடி குறித்து கூட்டமைப்பு இன்று ஆராயும்

கொழும்பு,ஒக்.30

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிநிலை குறித்து ஆராய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று கொழும்பில் கூடுகின்றது.

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கூட்டம் பக்கம் 11

# விரைவில் மாகாணத் தேர்தல்

## ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம, சந்தகிரிகொட பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போது மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

இதனால் தேர்தல் ஆணைக்குழுக்களுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டு, அவ்விடயத்தில் காணப்படும் குறைநிறைகளை ஆராய்ந்து விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

இதேவேளை, வடக்கு மக்களுக்கு வேண்டிய வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கு



வேண்டிய நிதி போதியளவு கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் அவ்விடயம் தொடர்பில் அமைச்சரவையில் இதுவரைகாலமும் பேச்சுவார்த்தை மாத்திரமே இடம்பெற்றுள்ளது – என்றார்.

# அரசின் பேச்சாளர்களாக சமரசிங்க, கெஹெலிய

கொழும்பு, ஒக். 30


புதிய அரசின் பேச்சாளர்களாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவர் தலைமையில் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு இன்று முற்பகல் அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறி புதிய அரசு அமைக்கும் நிலையில், அரசின் முக்கிய பதவி நிலைகளில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. அந்தவகையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த இந்த இருவருக்கும் அரசின் பேச்சாளர்கள் பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணிலின் கையெழுத்துடன் தூதர்களுக்கு போலிக் கடிதம்



Prime Minister of Sri Lanka

27th October 2018

Dear Honorable Ambassadors,

I write to inform you that Sri Lanka President Mithripala Sirisena has unconstitutionally appointed former president Mahinda Rajapaksha as a Prime Minister while I'm in the office. As per 19th amendment to the Sri Lankan governments' constitution [Article (42)4] President does not have the power to oust its Prime Minister while he or she held the majority.

This is unconstitutional action by the President and I would like to request your cooperation on this. As we discussed earlier today, as the acting Prime Minister I would like to request all your support to protect Sri Lanka and its peace. There are numerous violent activities has been reported. It seems civil servants, government officials and state security services have no control of it. Therefore I would like to request to consider the possibility of deploying United Nations Peacekeeping Forces in Sri Lanka to protect its peace and civil rights. Please review this matter at your urgency and let me know your decision.

Ranil Wickremesinghe, MP
Prime Minister

Copies: United States Embassy in Sri Lanka, British High Commission Colombo, Embassy of Germany (Colombo), Embassy of France (Colombo), Royal Norwegian Embassy (Colombo), Ambasciata d'Italia - Colombo

கொழும்பு, ஒக். 30

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த ஐ.நா அமைதிப்படையை நிறுத்துமாறு கோரி, வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் போலியான கையொப்பத்துடன் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தக் கடிதம் முற்றிலும் போலியானது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், சிவில் உரிமைகளை நிலை நிறுத்தவும், அமைதியை ஏற்படுத்தவும், ஐ.நா அமைதிப்படையை நிறுத்துவதற்கான சாத்தியங்கள் குறித்து அவசரமாக ஆராயுமாறு, அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளின் தூதரகங்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதன் பிரதிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. (ஐ)

# மங்களவின் பாதுகாப்பும் நீக்கம்

கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி மைத்திரிபாலவையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் கடுமையாக விமர்சித்துவரும் – நிதியமைச்சராக இருந்த – மங்கள சமரவீரவின் பாதுகாப்பும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் மங்கள சமரவீர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மைத்திரிபால மீண்டும் தாக்குதல் தொடுத்துள்ளார். எனது பாதுகாப்பும் விலக்கப்பட்டுள்ளது. ஐயோ&. சிறிசேன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தானேதான் சட்ட ரீதியான பிரதமர் என அறிவித்து வரும் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி, பிரதமரால் அரசியல் சபை நியமனம்

கொழும்பு, ஒக். 30

அரசு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய, ஜனாதிபதி மற்றும் பிரதமரால் அரசியல் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளடங்களாக 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டலஸ் அழகப்பெரும, தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, மஹிந்த அமரவீர, திலங்க சுமதிபால, டிலான் பெரேரா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசியல் சபையானது நேற்று முன் தினம் இரவு ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மின்சார சபையின் ஆண்டு விழாவையொட்டி இரத்த தான நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கை மின்சார சபையின் 49ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால், இரத்த தான நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை யாழ் பழைய பூங்கா வீதியிலுள்ள மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் இரத்த தான நிகழ்வு இடம்பெறும்.

இரத்த தான நிகழ்வில் மின்சார சபையின் வடமாகாண உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்களும் பங்குபற்ற உள்ளனர்.

## காதாகால பூஷணம் பட்டம் வழங்கல்

செல்வன் சு. அனந்த நாராயணன் சர்மாவுக்கு ஒக்டோபர் 20 ஆம் திகதியன்று கொழும்பு சீரடிசாயி மத்திய நிலையத்தில் 'கதாகால பூஷணம்' எனும் பட்டம் இலங்கை சிராடிசாயி மத்திய நிலையத்தினரால் வழங்கப்பட்டது.

அனந்த நாராயணன் சர்மா புகழ்பெற்ற மிருதங்க வித்துவான் 'காலபூஷணம்' அ. கணேஷ சர்மாவின் அன்பு பேரனும் வட்டுக்கோட்டை, பம்பலபிட்டியைச் சேர்ந்த பிரபல பட்டயக் கணக்காளரும், பிரபல மிருதங்க வித்துவானுமாகிய பிரம்ம க. சுவாமிநாதன் சர்மா தம்பதிகளின் மகனும் ஆவார்.

இவர் கொழம்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்று வருகிறார்.

## 'ஒக்டோபர் 30' இந்து கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கு முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட 'ஒக்டோபர் 30' நாளையொட்டி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு, யாழ் நூலக மாநாட்டு மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றை யாழ்கிளிநொச்சி முஸ்லிம் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

இன்றைய இந்த நிகழ்வில் 'தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பாதையில் வடக்கு முஸ்லிம் மக்கள்' என்ற கருப்பொருளில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை எஸ். ஜோசப் இம்மானுவேல், வடக்கு முஸ்லிம் சிவில் சமூகத்தின் தலைவர் அப்துல்றஹீம் அப்துல்றமீஸ் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாக கலந்து கொள்வர். (ஐ)

## பதவியேற்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி மற்றும் பொருளாதாரம் போன்ற முக்கிய அமைச்சுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன், டக்ளஸ் தேவா னந்தா, தொண்டமான், திகாம்பரம் ஆகியோரும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

புதிய அமைச்சரவை – இராஜாங்க – பிரதியமைச்சர்கள் விவரம் வருமாறு:

1) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ – நிதி மற்றும் பொருளாதார விவகார அமைச்சர்

2) மஹிந்த அமரவீர – விவசாய அமைச்சர்

3) நிமல் சிறிபாலடி சில்வா – போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

4) ஆறுமுகன் தொண்டமான் – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

5) டக்ளஸ் தேவானந்தா – மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர்

6) கலாநிதி சரத் அமுனுகம – வெளிவிவகார அமைச்சர்

7) மஹிந்த சமரசிங்க – துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர்

8) ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய – மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

9) விஜேதாஸ ராஜபக்ஷ – கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர்

10) விஜித் விஜயமுனி சொய்ஸா – மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

11) பைசர் முஸ்தபா – உள்ளுராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்

12) வசந்த சேனாநாயக்க – சுற்றுலா மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர்

13) வடிவேல் சுரேஷ் – பெருந்தோட்டக்கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

14) ஆனந்த அளுத்கமகே – சுற்றுலா மற்றும் வனஜீவராசிகள் பிரதியமைச்சர்

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தனியாட்சி அமையும் பட்சத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30ஐயும், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் எண்ணிக்கை 45 ஐ விஞ்சுதலாகாது எனக் கூறப்பட்டுள்ளது. தேசிய அரசு அமையும் பட்சத்தில் நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் தொகையை அதிகரிக்க முடியும். அதற்கும் வரையறை இருக்கின்றது.

எனவே, அடுத்துவரும் நாள்களிலும் அமைச்சரவை நியமனங்கள் மேலும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுக்கப்பட்டு வருகின்றமை தெரிந்ததுதான்.

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான இரா. சம்பந்தனுக்கே முன்னர் ஒரு தடவை கனடாவில் விசா அனுமதி மறுத்தமை தெரிந்திருக்கும்.

சுரேஷ் பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சித்தார்த்தன், விநோகராதலிங்கம் என்று முன்னாள், இந்நாள் எம்.பிக்கள் பலபேருக்கு கனடா கதவடைப்பு செய்திருக்கின்றது.

இந்த வரிசையில் மாவை சேனாதிராசாவுக்குக் கூட முன்னர் கனடா விசா மறுப்புத் தெரிவித்ததாம். அவர் விட்ட தவறு விடுதலைப்புலிகளின் கொடிஒன்றுக்கு முன்னாள் நின்று உரையாற்றியமைதான். எனினும் பின்னர் இவரது நிலையை உணர்ந்து விசா வழங்கியது.

சிவசக்திஆனந்தனும் நாடாளுமன்றக் குழுவில் இடம் பெற்றமையால் வேறு வழியின்றி கனடா ஒரு தடவை அனுமதி வழங்க வேண்டியதாயிற்று.

இந்த வகையில் செல்வம் அடைக்கலநாதனுக்கும், துரைரட்ணசிங்கத்துக்கும் இப்போது அதிஷ்டம் அடித்துள்ளது. நாடாளுமன்றக் குழுவொன்றில் அங்கம் வகித்து கனடா செல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இருவரும் கனடா புறப்பட்டு விட்டனர். ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி சில சமயங்களில் எல்லாவற்றையும் போட்டது போட்டபடி போட்டுவிட்டு இருவரையும் இடையிலேயே திரும்பி வரப்பண்ணிவிடும் போலத் தோன்றுகின்றது.

இதே சமயம், கனடாவுக்கு சென்றிருக்கும் மற்றொரு எம்.பியான வியாழேந்திரனுக்கும் இந்த நெருக்கடி வரலாம்.

பாவம் மூவரும் கனடா ப்ரீப்பை இடைவழியில் முறிக்க வேண்டிய கட்டாயம் வந்து விடும் போல.

இன்னொரு கொசுறுத் தகவல். செல்வம் அடைக்கலநாதன் கனடா புறப்பட முன்னர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிவிட்டுத்தான் புறப்பட்டார் என்பது பஸில் பக்கத்து தகவல். என்ன பேசினார்கள் என்பது ஆண்டவனுக்குதான் வெளிச்சம் .

-மின்னல்-

# வடக்கு மக்களின் பிரச்சினையை தீர்க்க எவருமே முன்வரவில்லை!

## அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 30

வடக்கு மக்களின் பிரச்சினைகளை கடந்த மூன்றரை வருடங்களில் தீர்ப்பதற்கு, பொறுப்பு வாய்ந்த எவரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை – திஸ்ஸமஹாராமவில் நேற்று இடம்பெற்ற 2018ஆம் ஆண்டுக்கான தேசிய நெல் விதைப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தம் இடம்பெற்றபோது பல்வேறு இன்னல்களை அனுபவித்த வடக்கு மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

2015ஆம் ஆண்டு முதல் நான்கு வருடங்களுக்கு அண்மித்த காலப்பகுதி வரை, வடக்கில் வீடுகளை நிர்மாணிக்கின்றமை குறித்து அமைச்சரவையில் பேசப்பட்டபோதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வெளிநாட்டு நிதியுதவிகளை எந்த அமைச்சின் கீழ் பயன்படுத்துவது, யார் பயன்படுத்துவது என்ற சர்ச்சையே மூன்றரை வருடங்களாக இடம்பெற்றிருந்தது.

அந்தப் பொறுப்புக்களை வகித்தவர்கள், வடக்கு மக்களுக்கான வீடுகளைக் கூட அமைத்துக் கொடுக்கவில்லை.

வடக்கு, தெற்கு என்பது பிரச்சினை கிடையாது. நாட்டு மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் கலந்துரையாட வேண்டும் – என்றார். (ஐ)

# 610 நாள்களைக் கடந்துள்ள கேப்பாபிலவுப் போராட்டம்




முல்லைத்தீவு, ஒக். 30

இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த நிலங்களை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் நேற்றுடன் 610 நாட்களைத் தாண்டி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது .

கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் முதற்கட்டமாக இந்த வருட ஆரம்பத்தில் ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் மீதமுள்ள தமது காணிகளும் விடுவிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்து மக்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

610 ஆவது நாளான நேற்று யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் பங்களிப்புடன் கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு நகரில் கவனவீர்ப்பு ஆர்ப்பட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு நகரில் ஆரம்பமான இந்தப் பேரணி மாவட்ட செயலகம் வரை சென்று பதில் அரச அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிப்புடன் நிறைவுக்கு வந்தது. (ஐ)

# ஜனாதிபதி கொலைச் சதியில் பொன்சேகா, ரணில் தொடர்பு

## நாமல் குமார அதிரடித் தகவல்



கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான கொலை சதித் திட்டத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சரத் பொன்சேகா ஆகியோரும் தொடர்புபட்டுள்ளனர் என ஊழலுக்கு எதிரான படையணியின் நடவடிக்கைப் பணிப்பாளர் நாமல் குமார தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் மற்றும் சரத்பொன்சேகா ஆகியோரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் கொலைச் சதித்திட்டங்களைத் தீட்டினர்.

இதற்காகப் பாதாள உலகத் தலைவன் மாகந்துர மதுஸ் என்பரை பயன்படுத்தத் தீர்மானித்ததோடு, பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நாலக டி சில்வாவிடம் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

அந்தவகையில் கைது செய்யப்பட்டுள்ள நாலக டி சில்வா, தனது சுய நோக்கத்துக்காகச் செயற்படாதமையால் அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கினால் பிரச்சினை இல்லை.

ஆனால் இவ்விடயத்தில் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்–என்றார். (ஐ)

# திஸ்ஸமஹாராம விகாரையில் மைத்திரி – மஹிந்த வழிபாடு



கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி மைத்திரிபாலவும் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் திஸ்ஸமஹாராம விகாரையில் நேற்றுச் சமயக் கிரியைகளில் ஈடுபட்டனர்.

தேசிய ஏர்பூட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று திஸ்ஸமஹாராம சந்தகிரிகொட வயல் வெளியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் திஸ்ஸமஹாராம விகாரைக்குச் சென்று சமய கிரியைகளில் ஈடுபட்டனர்.

திஸ்ஸமஹாராம ரஜமகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி சங்கைக்குரிய தேவாலேகம தம்மசேன நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# நாட்டில் நெருக்கடி உக்கிரமடையலாம்

## மல்வத்து, அஸ்கிரிய பீடங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 30

யார் பிரதமர் என்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் பிரதமர் நியமனம் அரசமைப்பின் பிரகாரமும் சட்டபூர்வமான தாகவும் அமைய வேண்டும் எனத் தெரிவித்துள்ள அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள், தன் பக்க நியாயங்களை மாத்திரம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மேலும் உக்கிரமடையலாம் எனவும் அறிவித்துள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மஹா சங்கத்தினரைச் சந்தித்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து அவர் தெளிவுபடுத்தினார்.

இதன்போதே விரைவாக நாடாளுமன்றத்தைக் கூட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள் வலியுறுத்தியுள்ளன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமரும் ஏற்கனவே பதிவியில் உள்ள பிரதமரும் தம் பக்க நியாயங்களைக் கூறி வருகின்றனர். ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என அவை சபாநாயகரிடம் சுட்டிக் காட்டியுள்ளன. (ஐ)

# உண்மையான வீரத்தை நாடாளுமன்றில் காட்டுக!

## மஹிந்தவுக்கு சம்பிக்க ரணவக்க சவால்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உண்மையான வீரராக இருந்தால் நாடாளுமன்றில் நேருக்கு நேர் ஐ.தே.க.வைச் சந்திக்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சவால் விடுத்துள்ளர். அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாளை (இன்று) காலையே மஹிந்த நாடாளுமன்றத்தைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். அதுவரை ரணிலே பிரதமர். இதனை வலியுறுத்தி கொழும்பில் இன்று பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படும். கறுப்புக் கொடிகள் சகிதம் அனைவரும் இதில் பங்கேற்கவேண்டும் – என்றார். (ஐ)

# ரணிலை வெளியேற்றுவதற்கு ராணுவம் பயன்படுத்தப்படாது

## கூறுகின்றார் நாமல் எம்.பி.

ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையிலிருந்து வெளியேற்ற இராணுவத்தினரைப் பயன்படுத்தப் போவதில்லையென நாடாளுமன்ற உறுஇப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையிலிருந்து வெளியேறுவதற்குக் கால அவகாசம் வழங்குவதற்குத் தயாராகவிருப்பதாகவும் அவர் கூறினார்.

நாம் எவ்விதத்திலும் பாதுகாப்பு பிரிவைப் பயன்படுத்தி ரணிலை அலரிமாளிகையில் இருந்து வெளியேற்றமாட்டோம். அவர் தற்போது முன்னாள் பிரதமர் என்பதால், அங்கிருந்து வெளியேறக் கால அவகாசம் வழங்கப்படும் எனவும் நாமல் தெரிவித்தார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஆட்சிக் கவிழ்ப்புச் சதி...!

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்க்கதரிசன மற்ற அரசியல் நடவடிக்கைகளினால் நாடு பெரும் அரசமைப்புச் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டு நிற்கின்றது என்பது கண்கூடு.**

**பதவியில் இருக்கின்ற பிரதமர் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பெறவில்லை என்று தமக்குத் தாமே கற்பிதம் பண்ணிக்கொண்டு, புதியவர் ஒருவரை – நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றவர் என்று தாம் கருதும் ஒருவரை – தாம் புதிய பிரதமராக நியமித்துள்ளார் என்று அறிவித்து அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**அரசமைப்புக்கு முரணான செயற்பாடு என்ற இந்த நடவடிக்கையே நாட்டை அரசியல் சிக்கலுக்குள் மாட்டிவிட்டிருக்கின்றது என்கின்றனர் அரசியல் வல்லுநர்கள்.**

**பதவியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலமோ, ஆதரவோ இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருதுகின்றமை உண்மை எனில் –**

**தாம் புதிதாக நியமித்திருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்று ஜனாதிபதி சிறிசேன வெளியிடும் நம்பிக்கை நிஜம் எனில் –**

**அதனை நாடாளுமன்றத்தில் உடனடியாக நிரூபிக்கின்றமைக்கு இடமளிக்கவேண்டியதுதானே? ஏன் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைக்க வேண்டும்? சத்தம் சந்தடியின்றி – பதவியில் இருக்கின்ற பிரதமருக்கே தெரியாமல் – அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, புதியவரை நியமித்த கையோடே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஏன் ஒத்திவைக்கவேண்டும்?**

**அங்குதான் ஜனாதிபதியின் அரசியல் கரவுத்தனம் அப்பட்டமாக அம்பலமாகின்றது.**

**தான் செய்த அரசியல் குளறுபடித்தனத்தை மூடிமறைப்பதற்காக – புதிய ஆட்சிக்குத் தேவையான நாடாளுமன்றப் பலத்தை குதிரைப் பேரம் மூலம் வாங்கிக் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பெறுவதற்காக – இந்த நாடாளுமன்ற முடக்கம் என்பது வெளிப்படையானது.**

**அதனால்தான் முடக்கபட்ட நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுங்கள் என்ற அழுத்தம் பல தரப்புகளில் இருந்தும் – குறிப்பாக ஜனாதிபதி சிறிசேனவுக்கு வந்தபடி உள்ளது.**

**பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் அடங்கிய நீண்ட பட்டோலை ஒன்றை நேற்று முன்தினம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு படித்திருக்கின்றார்.**

**அத்தகைய குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருப்பின், அவ்வப்போதே அவை குறித்து சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அரசியல் ரீதியாக நடவடிக்கை எடுப்பதாயின் ஜனாதிபதி தாமே நாடாளுமன்றின் முன்தோன்றி, அங்கு இந்தக் குற்றச்சாட்டுக்களை அடுக்கி, நாடாளுமன்றத்தின்முன் விடயத்தை விளக்கி, நீதி செய்யும்படி கோரியிருக்கலாம். நாடாளுமன்றத்துக்குத் தனது தரப்பு விளக்கத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்த பின்னர் நாடாளுமன்றம் தனது முடிவை எடுத்திருக்கும். அதுதான் முறை.**

**நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெறுபவர்தான் பிரதமராக இருக்கவேண்டுமே தவிர, ஜனாதிபதியின் விருப்புக்குரியவர் என்பதல்ல.**

**நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெற்றவர் பிரதமராக இருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் எடுப்பார் என்று கூறப்படுகின்றது.**

**நாடாளுமன்றில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டும்படி சபாநாயகரைக் கேட்டிருக்கின்றார்கள்.**

**அப்படி நாடாளுமன்றத்தில் அவரைவாசிக்கு மேற்பட்டோரின் கோரிக்கை அமையுமானால் ஜனாதிபதியினால் முடக்கப்பட்ட நாடாளுமன்றத்தைத் தாம் கூட்டமுடியும் என்று சபாநாயகர் கருதுகின்றார் என்றும் ஒரு தகவல் தெரிவித்திருக்கின்றது.**

**இது தொடர்பில் 2003இல் அப்போதைய சபாநாயகர் ஜோஸப் மைக்கல் பெரேரா அளித்த வழிகாட்டுத் தீர்ப்பு ஒன்று தமக்குப் பக்கபலமாக இருப்பதாக இப்போதைய சபாநாயகர் கரு ஜெயசூரிய கருதுகின்றார் எனவும் தெரிகின்றது.**

**இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களை சபாநாயகர் இன்று சந்திக்கின்றார்.**

**நாடாளுமன்றத்தை முடக்கும் ஜனாதிபதியின் உத்தரவை மீறி நாடாளுமன்றத்தை சபாநாயகர் கூட்டுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன என்றும், அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அது சில சமயம் பெரும் அரசமைப்பு நெருக்கடியாகப் போய் முடியும் என்றும் சில வட்டாரங்கள் கூறுகின்றன.**

**ரணிலின் அரசை சட்டமுறையற்ற விதத்தில் இவ்வாறு செயலிழக்கச் செய்தமை 'அரசமைப்புக்கு முரணாக முன்னெடுக்கப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புச் சதி' என்றும் கூட இப்போத காட்டமாக விமர்சிக்கப்படுகின்றது.**

**பழைய அரசைத் தக்க வைத்தல், புதிய அரசை நிலைநிறுத்துதல் என்ற தற்போதைய அரசியல் பலப்பரீட்சையில் மஹிந்த ராஜபக்ஷ வெல்லலாம்; அல்லது ரணில் விக்கிரமசிங்க வெல்லலாம். யார் வென்றாலும் வேறு ஒருவர் தோற்கப்போவது நிச்சயம்.**

**அவர் – ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன. அரசமைப்புக்கு முரணான நடவடிக்கைகளை முன்னெடுத்தமை மூலம் அரசியலில் தோற்றுப்போன ஒருவராகவே அவர் இனிமேல் அடையாளம் காணப்படுவார். இது தவிர்க்கப்பட முடியாத ஒன்று.**

# மன்னார் கூட்டுறவுக் கட்டடத்தை ராணுவம் 28 வருடங்களின் பின் நேற்று விடுவித்தது



மன்னார் நகர நுழைவாயிலிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கட்டடத்தை சுமார் 28 வருடங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த இராணுவத்தினர் நேற்று அதனை விடுவித்துள்ளனர்.

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த இந்தக் கட்டடம், நேற்று நண்பகல் மன்னார் நகர உதவி பிரதேசச் செயலாளர் திருமதி சிவசம்பு கனகாம்பிகையால் கூட்டுறவு திணைக்கள அதிகாரியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் படை யினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட, வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மன்னார் நகர நுழைவாயிலில் இராணுவத்தின் வசம் காணப் பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங் கத்துக்குச் சொந்தமான கட்ட டத்தை உடனடியாக பலநோக் குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்குமாறு பிரதேசச் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக இந் தக் கட்டடம் நேற்று, மதியம் இராணுவத்திடம் இருந்து மீளப்பெற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

எனினும் இந்தக் கட்டடத்தில் இருந்து இராணுவம் முழுமையாக வெளியேறாத நிலையில் எதிர்வரும் புதன்கிழமைக்குள், இராணுவம் முழுமையாக வெளி யேறக் கால அவகாசம் வழங்கப் பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் 1990 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் வசம் காணப்பட்டது. இந்நிலையில் சுமார் 28 வருடங்களின் பின்னர் அது விடுவிக்கப்பட்டுள்ளது.

# மைத்திரியின் செயற்பாட்டால் கேலிக்குள்ளாகியது இலங்கை

## கடுமையாகச் சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி மைத்திரிபாலவின் முறையற்ற செயற்பாட்டால் இன்று இலங்கை அரசியல் சர்வதேசத்தில் கேலிக்கூத்தாக் கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸ்ஸாநாயக்க, தனது அரசியல் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று இடம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்தமை எதேச்சையாக இடம் பெறவில்லை. அதுவொரு அரசியல் சூழ்ச்சி. கடந்த வெள்ளிக்கிழமைக்கு பிறகு ஆட்சி மாற்றத்துக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் நாட்டு மக்கள் உட்பட சர்வதேசங்களும் கேள்வி எழுப்பினர். அனைவரின் கேள்விகளுக்கும் நேற்று முன் தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலளிக்கும் வகையில் உரையாற்றினார். இவரது உரையில் எவ்வித புதிய விடயங்களும் காணப்படவில்லை, மாறாக பல கேள்விகளே எழுந்துள்ளன–என்றார். (ஐ)

# மஹிந்தவைப் பிரதமராக ஏற்க பின்னடிக்கும் சர்வதேச சமூகம்

கொழும்பு, ஒக். 30

இலங்கை பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேசம் அந்த நியமனத்தை ஏற்றுக்கொள்வதில் தாமதம் காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எந்தவொரு நாட்டிலும் புதிதாக ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியேற்றால் ஏனைய நாடுகள் தங்களின் வாழ்த்துக்களை தெரிவிக்கும். ஆனால் மஹிந்தவுக்குச் சீனாவைத் தவிர வேறு எந்தவொரு நாடும் இன்னும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லையெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை அரசியலில் திடீர் திருப்பமாக ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டணி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுப் பிரதமராக மஹிந்த தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது ஏனைய நாடுகளும் எதிர்பார்த்திருக்காத ஒன்றெனவும் அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தவகையில் வழமையாக அண்டை நாடான இந்தியாவே இவ்வாறான விடயங்களில் முதலில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும். ஆனால் அந்நாடே இம்முறை வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் சீனத் தூதரகம் மாத்திரம் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் மாபெரும் ஜனநாயகப் போராட்டம்

## இன்று நடத்த ஐ.தே.க. ஏற்பாடு

கொழும்பு, ஒக். 30

ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து மக்களும் இன்று நடைபெறவுள்ள போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.



அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்தப் போராட்டம் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இன்று இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனநாயத்தை நாட்டில் தொடர்ச்சியாக ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட அனைவரும் இதில் பங்குகொள்ளவேண்டியது அவசியமெனவும் அகிலவிராஜ் காரியவசம் சுட்டிக்காட்டினார்.

புதிய பிரதமராக மஹிந்த நியமிக்கப்பட்டமை அரசமைப்புக்கும் நாட்டின் ஜனநாயத்துக்கும் முரணான செயற்பாடு என ஐக்கிய தேசிய கட்சி தொடர்ச்சியாக சுட்டிகாட்டி வருகின்ற நிலையில், அதனை வலியுறுத்தும் வகையில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாளை

31.10.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: பூசம் பி.இ. 3.48 வரை
திதி : ஸப்தமி பி.ப. 12.11 வரை
சுபநேரம் : 4.33 – 6.03 வரை
இராகுகாலம் : 12.03 – 1.33 வரை

# மனோவுக்கு வலை வீசுகிறார் மஹிந்தர்

## தேசிய அரசமைக்க வருமாறு கோரிக்கை



கொழும்பு, ஒக்ரோபர் 30

புதிய அரசில் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறும், சிங்கள அரசை அமைப்பதற்கு தான் விரும்பவில்லை, இதனால் தேசிய அரசை அமைக்கும் வகையில் ஒத்துழைப்பு வழங்குமாறும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை முன்னணியின் பிரதித் தலைவரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பி.திகாம்பரத்துடனும் புதிய பிரதமர் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார். அரசுக்கு ஆதரவு வழங்கு மாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மனோ கணேசனுடன் தொடர்புகொண்டு தமது அரசுக்கு ஆதரவு வழங்குமாறு கோரினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பாகவும் ஆதரவுக்கான கோரிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் அதியுயர்பீடக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் மனோ கணேசன் விளக்கிக்கூறியுள்ளமையுடன் எத்தகைய முடிவை எடுக்கலாம் என்பது குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# மலையக மக்களுக்கு ஆதரவாக நேற்று வவுனியாவில் மனிதச் சங்கிலிப் போர்



வவுனியா, ஒக். 30

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு ஆதரவு தெரிவித்து மனிதச் சங்கிலிப் போராட்டமொன்று நேற்றுத் திங்கட்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா வைத்தியாலைக்கு முன்பாக ஒன்றிணைந்த அரசியல் கட்சிகளின் பொது அமைப்பினரால் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் போராட்டம் தொடர்பாக அவர்கள் கூறுகையில் –

தோட்டத்தொழிலாளர்கள் தமது அடிப்படைச்சம்பளம் 1000 ரூபாயை வலியுறுத்தி போராடி வருகின்றனர். அந்தப் போராட்டமானது இன்றைய சூழலில் நியாயமானதும் சரியானதும் ஆகும்.

ஆகவே அவர்களுக்கு வவுனியா மாவட்ட ஒன்றிணைந்த அரசியல் கட்சிகளின் பொது அமைப்பினர் எனும் அடிப்படையில் ஆதரவுக்கரத்தை நீட்டுகின்றோம் – என்றனர்.

இந்தப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இ.இந்திரராசா ஆகியோருடன் ஈழவர் புரட்சி அமைப்புக்கட்சி, புளொட் அமைப்பு, புதிய ஜனநாயக மார்க்லெனிசக் கட்சி, ஸ்ரீரெலோ கட்சி, முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம், தமிழ் விருட்சம் அமைப்பு ஆகியன கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கல்வி அபிவிருத்திக்கு மாவை நிதி ஒதுக்கீடு



யாழ்ப்பாணம், ஒக். 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, வலி.வடக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேசத்தில் கல்வி, விளையாட்டு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் தரம் – 1 பாடசாலைகளான யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, அருணோதயக் கல்லூரி ஆகியவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் தலா 10 லட்சம் வீதம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி கல்வி அபிவிருத்தியுடன் மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடாகிய விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கவும் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்கமைப்புக்களை வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசியல் நெருக்கடிக்கு சீனாவே முழுக் காரணம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

இலங்கை அரசில் இருந்து தாவுபவர்களுக்கு நிதியை வழங்கி, தற்போதைய அரசமைப்பு நெருக்கடிக்குச் சீன அரசே காரணமாக இருப்பதாக, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் –

புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு நிதியைச் செலவிடுவதை சீனா கைவிடவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவை நீக்கும், கூட்டு அரசைக் கவிழ்க்கும் திட்டமானது ஓர் அனைத்துலகச் சதிவேலை.

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிதியளிக்கவேண்டாம் என்று சீன அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பூகோள அதிகார சக்தி, நாடுகளை விலைக்கு வாங்க முனைகிறது, இது உண்மை.

அதனை அவர்கள் பல நாடுகளில் செய்திருக்கிறார்கள். கானா, துனீசியா, அங்கோலா, பபுவா நியூகினியா, மியான்மார் போன்ற நாடுகளில் இதனைச் செய்திருக்கிறார்கள் – என்றார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, இந்தத் தருணத்தில் நான்கு அல்லது ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவும் வாய்ப்புகள் இருப்பதாக கூறினார். (ஐ)

# வடக்கில் தேர்தலை நடத்தாமை உரிமையைப் பறிக்கும் செயல்

## கண்டிக்கிறார் ஜீ.எல். பீரிஸ்



கொழும்பு, ஒக். 30

மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பது மிகவும் மோசமான செயலென பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கில் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பாகத் தானே முடிவெடுப்பதாக ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார் எனவும் இது மிகவும் பாரதூரமான செயலென்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் செயலகத்தில் நேற்று முன் தினம் செய்தியாளர்களை சந்தித்தபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த அரசு ஜனநாயக விழுமியங்களை மீறிச் செயற்பட்டது. ஒரு நாட்டின் மக்களுடைய விருப்பைப் பிரதிபலிப்பதே தேர்தல். அதனையும் நடத்தாமல் பிற்போட்டது. ஆறு மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் நிறைவடைந்துவிட்டது. இவற்றில் மூன்றின் பதவிக்காலம் நிறைவடைந்து ஒரு வருடத்துக்கு மேலானது. இதனை ஏற்க முடியாது.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், வடக்கில் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பாகத் தானே தீர்மானிப்பதாகக் குறிப்பிட்டார். இது ஜனநாயக விரோதச் செயற்பாடாகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் செய்யவேண்டிய விடயத்தை அரசின் பிரதிநிதியாக செயற்படும் ஆளுநர் முன்னெடுக்கப் பார்ப்பது பாரதூரமானது.

அத்தோடு, ஜனாதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கொலைச்சதித்திட்டம் தொடர்பான விடயத்தை அரசு கையாண்ட விதம் மிகவும் மோசமானது. நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் இவ்வாறான விடயத்தை இதற்கு முன்னர் கண்டதில்லை. நாட்டின் ஜனாதிபதிக்கே இவ்வாறென்றால் மக்களின் நிலை எவ்வாறு அமையும்? அதனடிப்படையில் பார்த்தால் தற்போதைய பிரதமர் நியமனம் ஏற்புடையதே.

இதேவேளை, ஐ.நா. அமைதிப்படையிலிருந்து கேணல் அமுனுபுரவை திருப்பியழைக்க உத்தரவிடப்பட்டமை தனக்கு கிடைத்த வெற்றியென யஸ்மின் சூக்கா குறிப்பிட்டுள்ளார். ஒரு அரசசார்பற்ற நிறுவனம் இவ்வாறு குறிப்பிட்டமை நாட்டின் இறைமைக்கு... இறையாண்மைக்கு அவப்பெயர். எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் இவ்வாறு கூறமுடியாது. எமது அரசு இருந்திருந்தால் கேள்வி எழுப்பியிருப்போம்.

ஐ.நா. சாசாசனங்களை மதித்து செயற்படுவதாகவும் எமது பிரச்சினைகளை நாட்டிற்குள் தீர்த்துக்கொள்ள இடமளிக்குமாறு ஜனாதிபதி ஐ.நா.வில் கூறியிருந்தார். அதனை நாம் பின்பற்றுவதோடு, இனிவரும் காலத்தில் எமது செயற்பாடுகள் தொடர்பாக அறிவிப்போம் – என்றார். (ஐ)

# கண்டி வன்முறை விவகாரம்; அமித் வீரசிங்கவுக்கு பிணை

கொழும்பு, ஒக். 30

கண்டி வன்முறை விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மஹாசன் பலகாய இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கண்டி வன்முறை விவகாரம் தொடர்பான வழக்கு தெல்தெனிய நீதவான் நீதிமன்றத் தில் நேற்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது, அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கண்டி – தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களின் பிரதான சூத்திரதாரியாக அமித் வீரசிங்க அடையாளப்படுத்தப்பட்டு அவருடன் சேர்த்து 18 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கண்டிக் கலவரத்தால் நாட்டில் அனைத்துப் பகுதிகளும் அமைதியற்ற சூழல் நிலவியமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

# விவசாயத்துறை அமைச்சு மஹிந்த அமரவீரவுக்கே

கொழும்பு, ஒக். 30

புதிய அரசின் விவசாயத்துறை அமைச்சராக மஹிந்த அமரவீரவை நியமிக்கவுள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

பெரும்போகத்துக்கான விதையிடல் ஆரம்ப நிகழ்வும் ஜனாதிபதியினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாட்டின் புதிய பிரதமராக மஹிந்த பதவியேற்றுள்ள நிலையில், விரைவில் புதிய அமைச்சரவை நியமிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், விவசாய அமைச்சர் பற்றி ஜனாதிபதி அறிவித்துள்ளார். (ஐ)

# ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்தமை சீனாவின் தூண்டுதலில்தான் நடந்தது

## தொல் திருமாவளவன் காட்டம்



இலங்கை பிரதமராக ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருப்பது, சீனாவின் தூண்டுதலில் தான் நடைபெற்றிருப்பதாக யூகங்கள் எழுந்திருக்கின்றன என, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தொல்.திருமாவளவன் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் –

இனப்படுகொலை குற்றவாளியான ராஜபக்ஷ இலங்கையின் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை அதிர்ச்சியளிக்கிறது. அது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமின்றி இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எனவே, இந்திய அரசு இதில் தலையிட்டு ராஜபக்ஷவின் சட்டவிரோத நியமனத்தை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

2015 ஆம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது சட்டத்திருத்தம் இலங்கை அதிபரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது. அதன்படி பிரதமரை நீக்குவதற்கு அதிபருக்கு அதிகாரம் கிடையாது. ஆனால், சட்டவிரோதமாக இலங்கை அதிபர் மைத்திரிபால பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்திருக்கிறார். இலங்கையில் நடைபெற்ற ஈழத்தமிழருக்கு எதிரான இனப்படுகொலையில் முதன்மை குற்றவாளி ராஜபக்ஷ ஆவார். ஐ.நா. மனித உரிமை அமைப்பு இது தொடர்பாக முன்னெடுத்த விசாரணை இன்னும் நிறைவு பெறாத நிலையில் ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்திருப்பது இலங்கைச் சட்டங்களுக்கு மட்டுமின்றி சர்வதேச நியதிகளுக்கும் எதிரானதாகும்.

இலங்கை அதிபர் செய்துள்ள இந்த அதிரடி மாற்றம் இந்துமாக்கடலில் மேலாதிக்கம் செய்ய முற்பட்டுள்ள சீனாவின் தூண்டுதலில் தான் நடந்திருக்கிறது என்ற யூகங்கள் எழுந்துள்ளன. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள இலங்கை அதிபரின் நடவடிக்கையை இந்திய அரசு தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும். – என வலியுறுத்தியுள்ளார்.

# தண்டவாளத்தில் இருந்து மது அருந்திய மூவரைப் பந்தாடிப் பலி கொண்டது ரயில்

## டெல்லியில் நடந்த பயங்கரம்

டெல்லியில்ரயில்தண்டவாளத்தில் அமர்ந்து மது அருந்திய 3 பேர் ரயில் மோதி உயிரிழந்த சம்பவம் நடந்துள்ளது.

டெல்லி நங்லாய் ரயில் நிலையம் அருகே 3 பேர் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து கொண்டு மது அருந்திக் கொண்டிருந்தனர். போதை தலைக்கு ஏற அவர்கள் ரயில் தண்டவாளத்தில் உற்சாகமாக நடனமாடிக் கொண்டிருந்தனர். இந்தநிலையில், சுமார் 7.30 மணி அளவில் அந்தவழியாக பிகானெர்-டெல்லி எக்ஸ்பிரஸ் ரயில் வேகமாக வந்துகொண்டிருந்தது.

போதையில் இருந்த இளைஞர்கள் ரயில் வருவது தெரியாமல் நடனமாடிக்கொண்டிருந்தனர். கடைசி நேரத்தில் ரயில் வருவதை கண்ட 3 பேரும் தண்டவாளத்தைக் கடக்க முயன்றனர். ஆனால், அளவுக்கு அதிகமாக மது அருந்தியதால் அவர்கள் தண்டவாளத்தை கடக்க முடியவில்லை. இதனால் கண்ணிமைக்கும் நேரத்தில் ரயில் அவர்கள் மீது மோதியது. இதில் 3 பேரும் தூக்கி வீசப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ரயில்வே பொலிஸார், அவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இறந்தவர்கள் யார், எந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து தெரியவரவில்லை.

# மூன்று லட்சம் விளக்குகள் ஏற்றி தீபாவளியன்று கின்னஸ் சாதனை

## உத்தரப்பிரதேச மாநில அரசு ஏற்பாடு





தீபாவளியன்று உத்தரப்பிரதேசத்தின் அயோத்தியில் சுமார் மூன்று லட்சம் விளக்குகள் ஒளி ஏற்றிப் பிரகாசிக்கப்பட உள்ளன. இதன்மூலம், மற்றொரு கின்னஸ் சாதனை நிகழ்த்தவும் உ.பி.யின் பாஜக அரசு முயற்சி செய்து வருகிறது.

கடந்த வருடம் – 2017 ஆம் ஆண்டு – வந்த தீபாவளியில் அயோத்தியின் தீப ஒளியை கின்னஸ் சாதனையாக்க முயற்சிக்கப்பட்டது. இதற்காக, அப்போது மொத்தம் ஒரு லட்சத்து 71 ஆயிரம் தீப விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன. இந்த முயற்சி இந்த வருடமும் தொடர உள்ளது.

நவம்பர் 6ஆம் தேதி வரவிருக்கும் இந்த வருடத் தீபாவளி ராமர் பிறந்த இடமாகக் கருதப்படும் அயோத்தியில் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. இதன் சரயூ நதிக்கரையில் கடந்த வருடத்தைப் போல் இந்தமுறையும் தீப உற்சவம் விமரிசையாகக் கொண்டாடப்படும்

இலங்கையில் ராவணனைக் கொன்ற ராமர் இந்த தீபாவளி நாளில் சீதை மற்றும் தம்பி லட்சுமணனுடன் அயோத்தி திரும்பியதை நினைவுகூரும் வகையிலும் காட்சிகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக ஒரு ஹெலிக்கொப்டரைப் பறக்கும் ரதமாகச் சித்திரித்து அதில் வந்து இறங்கும் வேடமணிந்த மூவரையும் முதல்வர் யோகி வரவேற்க உள்ளார்.

# சபரிமலை ஆலய சர்ச்சை: நீதிமன்றத் தீர்ப்பை ஆதரித்த ஆசிரமத்தின் மீது தீ வைப்பு!



சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு எந்த வயதுடைய பெண்களும் நுழையத் தடையில்லை என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதரித்த ஆசிரமத்துக்கு தீவைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சுவாமி சந்தீபாநந்தா கிரி பகவத் கீதை பள்ளிக்குச் சொந்தமான இரண்டு கார்கள், ஒரு ஸ்கூட்டருக்கு தீ வைக்கப்பட்டதில் அவை கருகிச் சாம்பலாயின. திருவனந்தபுரம் புறநகர்ப்பகுதியில் உள்ள இந்த ஆசிரமத்திற்கு நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் தீவைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று முந்தினம் காலை ஆசிரமத்துக்கு வருகை தந்த முதலமைச்சர் பினராயி விஜயன், கொள்கை ரீதியாக எதிர்கொள்ள முடியாத போது இது போன்ற வன்முறைச் சம்பவங்களைத்தான் கையிலெடுக்கின்றனர். சட்டத்தை தங்கள் கையில் எடுக்கும் எந்த ஒருவரையும் விட்டுவிட மாட்டோம். சுவாமிஜியின் நடவடிக்கைகள் மீது சகிப்புத்தன்மை இல்லாதவர்கள் ஆசிரமத்தைத் தாக்கியுள்ளனர் என்றார்.

கேரளா நிதியமைச்சர் தாமஸ் ஐசக் இது கொலை முயற்சி என்று குற்றம்சாட்டினார். சுவாமி சந்தீபாநந்தா கிரி சங்பரிவாரத்தின் நிலைப்பாடுகளை மதிப்பு மிக்க முறையில் எதிர்த்து வந்தார். இவரையும் இன்னொருவரையும் தாக்கியுள்ளனர், ஆசிரமம் முழுதும் தீயில் கருகி விட வேண்டும் என்பதே நோக்கம். வெளியேயிருந்து மக்கள் தீவைப்புப் பற்றி சுவாமிஜிக்கு தெரியப்படுத்திய பிறகுதான் அவருக்குத் தெரிய வந்துள்ளது. ஆனால் தீயணைப்புப் படையினர் விரைவில் சம்பவ இடத்துக்கு வந்ததால் உயிர்ச்சேதம் இல்லை. உண்மையான பக்தர்களையும் கூட இவர்கள் இப்படித்தான் தாக்குவார்கள் என்று கூறினார்.

அனைத்து பெண்களும் சபரிமலைக்கு வரலாம் என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதரித்த சந்தீபாநந்தா கிரிக்கு பெரிய அச்சுறுத்தல்களெல்லாம் இருந்து வந்தன. கொலை மிரட்டல்களும் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கத்தை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடிவு





மதுரை, ஒக்.30

18 எம்.எல்.ஏக்கள் தகுதிநீக்கம் செய்யப்பட்டதை உறுதி செய்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய டி.டி.வி. தினகரன் தரப்பினர் முடிவு செய்துள்ளனர்.

அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று தினகரனுக்கு ஆதரவாக செயல்பட்ட 18 எம்.எல்.ஏ.க்களையும் தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதையடுத்து அந்த 18 பேரிடமும், அம்மா மக்கள் முன்னேற்றக்கழக துணைப்பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் சந்தித்து ஆலோசனை நடத்தினார். மதுரை மாட்டுத்தாவணி, ரிங்ரோட்டில் உள்ள ஹோட்டலில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.


சென்னை நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதா? அல்லது இடைத்தேர்தலை சந்திப்பதா? என்பது குறித்து அனைவரிடமும் தினகரன் கேட்டார். அப்போது மேல்முறையீடு செய்யவேண்டும் என சிலர் கருத்து தெரிவித்தனர்.

'மீண்டும் மேல்முறையீட்டுக்கு சென்றால் அதில் தீர்ப்பு வர தாமதமாகும். அது எடப்பாடி–ஓ.பன்னீர் செல்வம் தரப்புக்கு சாதகமாகவே இருக்கும். அதனால் மேல்முறையீடு செய்யாமல் இடைத்தேர்தலை சந்திக்கலாம்' என்று ஒரு தரப்பினர் ஆலோசனை தெரிவித்தனர். மற்றொரு தரப்பினரோ இடைத்தேர்தலை சந்தித்தால் பெரும் செலவு செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர் எனத் தெரிகிறது.

இந்த ஆலோசனையின் முடிவில், தகுதி நீக்க வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது என தீர்மானிக்கப்பட்டது. 18 பேரும் ஒருமனதாக இந்த முடிவை எடுத்துள்ளனர்

# விமானம் கடலில் வீழ்ந்து நொறுங்கியதில் அதிலிருந்த 189பயணிகளும் உயிரிழந்தனர்

## இந்தோனேசியாவில் நேற்றுக் காலை பயங்கரம்






ஜகர்த்தா, ஒக்.30

இந்தோனேசியாவில் உள்நாட்டுப் பயணிகள் விமானம் ஒன்று நேற்றுக் காலை கடலில் வீழ்ந்து நொறுங்கியதில் அதில் பயணித்த 189 பேரும் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவில், லயன் ஏர் என்ற விமான சேவை நிறுவனம் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விமான சேவைகளை நடத்தி வருகிறது. தலைநகர் ஜகர்த்தாவில் இருந்து தினமும் காலை பங்கல் பினாங் என்ற பகுதிக்கு இந்த நிறுவனத்தின் விமானம் இயக்கப்படுவது வழக்கம்.

வழக்கம்போல நேற்றுக்காலை 6.20 மணிக்கு, ஜேடி-610 என்ற எண் கொண்ட லயன் ஏர் விமானம் ஜகர்தாவில் இருந்து புறப்பட்டது. அதில் 8 பணிப்பெண்கள், 2 விமானிகள், 2 குழந்தைகள், ஒரு கைக்குழந்தை உட்பட 189 பேர் இருந்தனர். விமானம், 7.20 மணிக்கு பங்கல் பினாங் பகுதிக்கு சென்றடைய வேண்டும். ஆனால் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விமான நிலையக் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனால் அந்த விமானம் என்ன ஆனது என்பது தெரியாததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து விமானத்தை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது. விமானம் மாயமான தகவல் தெரிய வந்ததும் அதில் பயணித்தவர்களின் உறவினர்கள் விமான நிலையத்தில் கூடினர்.

இந்நிலையில் அந்த விமானம் கடலில் விழுந்து நொறுங்கியது, தெரியவந்தது. அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது. விமானத்தின் உடைந்த பாகங்கள் இந்தோனேசிய கடலில் மிதக்கின்றன. அவற்றை மீட்கும் பணி நடந்து வருகிறது. விமானத்தின் கருப்புப் பெட்டியைத் தேடும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று விமான சேவையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த விமானம் இதற்கு முன்னர் டென்பசர் நகரிலிருந்து ஜகர்த்தாவில் உள்ள செங்கரங்க்கு பறந்துள்ளது. அப்போது விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்ட நிலையில் நடைமுறைப்படி அது சரி செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை லயன் ஏர் விமான நிறுவனத்தின் தலைமை நிர்வாகி எட்வர்ட் கூறியுள்ளார். இந்த விபத்துக்கும் முன்னர் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுக்கும் தொடர்பு உள்ளதா என விசாரிக்கப்படவுள்ளது. லயன் நிறுவனம் போயிங் 737 மேக்ஸ் 8 ரக விமானம் உட்பட அதே ரகத்தில் 11 விமானங்களை வைத்துள்ளது. இந்த விபத்து காரணமாக மற்ற விமானங்களின் இயக்கம் நிறுத்தப்பட மாட்டாது என எட்வர்ட் கூறியுள்ளார்.

### கடலில் வீழ்ந்த விமானத்தை செலுத்தியவர் இந்திய விமானி

இந்தோனேசியாவில் கடலில் விழுந்து விபத்துக்குள்ளான லயன் ஏர்லைன்ஸ் விமானத்தை இயக்கியவர் இந்திய விமானி என்பது தெரியவந்துள்ளது. டெல்லியைச் சேர்ந்த பாவ்யே சுனேஜா என்ற விமானிதான் விமானத்தை இயக்கியுள்ளார் என்று லயன் ஏர்லைன்ஸ் விமானம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விமானம் போயிங் 737 மேக்ஸ் 8 வகையைச் சேர்ந்தது. விமானத்தில் பயணிகள், ஊழியர்கள் என மொத்தம் 189பேர் பயணித்ததாகக் கூறப்படுகிறது.

வஜகார்த்தாவில் இருந்து காலை 6.20 மணிக்கு புறப்பட்ட விமானம் வானில் பறந்த 13 நிமிடங்களில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. விமானப் பயணத்தின்படி காலை 7.20 மணிக்கு பினாங் நகரை அந்த விமானம் அடைந்திருக்க வேண்டும். ஆனால், விமானம் அந்த நகருக்குச் சென்று சேரவில்லை.

ஜகார்த்தாவின் வடகடல் பகுதியில் உள்ள தன்ஜுங் பிரியோக் எனும் பகுதியில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. அங்கு விமானத்தின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, மீட்புப்படையினர், கடற்படையினர் அங்கு விரைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர், மேலும், ஹெலிக்கொப்டர் மூலமும் தேடுதல் பணிகள் நடந்து வருகின்றன. விமானம் விழுந்த கடல் பகுதியில் பயணிகளின் ஹேண்ட் பேக்குகள், அடையாள அட்டைகள், மொபைல் போன்கள், டிரைவிங் லைசன்ஸ் போன்றவை மிதக்கின்றமையை மீட்புப் படையினர் கண்டனர்.

விமானம் கடலில் 30 முதல் 35 மீட்டர் ஆழத்துக்குள் விழுந்திருக்கலாம் என்று கருதப்படுவதால், அதற்கான தேடுதல் பணிகள் நடந்து வருகின்றன.

இது குறித்து லயன்ஸ் விமானம் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் முகமது சயாகி கூறுகையில், "விமானத்தில் பயணித்தவர்களில் யாரும் உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. இப்போதுவரை விமானத்தில் இருந்து எந்தவிதமான சமிக்ஞையும் இல்லை. நம்பிக்கையோடு தேடுகிறோம். கப்பற்படையினர், மீட்புப்படையினர், இழுவை படகுகள் மூலம் மீட்புப் பணிகள் நடக்கின்றன. ஆழ்கடல் நீச்சல் அடிப்பவர்கள் மூலம் தேடுதல் பணிகள் நடந்து வருகிறது" எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே இந்த விமானத்தை இயக்கிய கேப்டன் இந்தியாவைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. டெல்லியின் மயூர் விஹார் பகுதியைச் சேர்ந்த பாவ்யே சுனேஜா என்பது தெரியவந்துள்ளது. இதை விமானம் நிறுவனமும் உறுதி செய்துள்ளது.

விமானி பாவ்யே சுனேஜா பைலட் பயிற்சியை முடித்து, எமிரேட்ஸ் விமானத்தில் பயிற்சி பைலட்டாகப் பணியாற்றியவர். அதன்பின் கடந்த 2009 ஆம் ஆண்டு பெல் ஏர் இன்டர்நேஷனல் நிறுவனத்திடம் இருந்து விமானம் ஓட்ட லைசன்ஸ் பெற்றுள்ளார்.

லயன் ஏர்லைன்ஸ் விமானத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு சுனேஜா பணிக்கு சேர்ந்துள்ளார். ஏறக்குறைய 6 ஆயிரம் மணிநேரம் விமானத்தை இயக்கிய அனுபவம் பெற்றவர், துணை விமானி 5 ஆயிரம் மணிநேரம் விமானத்தை இயக்கிய அனுபவம் பெற்றவர்.

# வங்கதேச முன்னாள் பிரதமருக்கு ஊழல் வழக்கில் 7 வருடச் சிறை!

### சிறப்பு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

ரூ.28 ஆயிரம் கோடி ஊழல் செய்த வழக்கில் வங்கதேசத்தின் முன்னாள் பிரதமரும், வங்கதேச தேசியக் கட்சியின் தலைவருமான கலிதா ஸியாவுக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அந்நாட்டுச் சிறப்பு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. ஏற்கெனவே ஓர் ஊழல் வழக்கில் 5 ஆண்டுகள் தண்டனை பெற்று கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து சிறை கம்பிகளுக்குப் பின்னால் வாழ்ந்து வரும் கலிதா ஸியாவுக்கு இந்த வழக்கின் தீர்ப்பும் இடியாக இறங்கியுள்ளது.

வரும் டிசம்பர் மாதம் வங்கதேசத்தில் பொதுத்தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில், அடுத்தடுத்த வழக்குகளில் கலிதா ஸியாவுக்குத் தண்டனை கிடைத்திருப்பது அவரின் ஆதரவாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

வங்கதேசத்தின் முன்னாள் பிரதமர் கலிதா ஸியா (வயது 73) மறைந்த தனது கணவர் பெயரில் ஸியாவுர் ரஹ்மான் பெயரில் அறக்கட்டளை தொடங்கி இருந்தார். அந்த அறக்கட்டளைக்கு ஆதாரங்கள் இல்லாத வகையின் மூலம் 3.75 லட்சம் டொலர் (ரூ.28 ஆயிரம் கோடி) பணத்தை தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, கலிதா ஸியா பெற்றார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஸியா அறக்கட்டளை ஊழல் வழக்கை வங்கதேச ஊழல் கண்காணிப்பு ஆணையம் தொடர்ந்து விசாரிக்கத் தொடங்கியது. இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் கலிதா ஸியா, ஸியாவின் முன்னாள் அரசியல் விவகாரத்துறை செயலாளர் ஹாரிஸ் சவுத்ரி, முன்னாள் உதவியாளர் ஸியாவுல் இஸ்லாம் முன்னா, தாக்காவின் முன்னாள் மேயர் சாதீக் ஹுசைன் கோகா, தனிச் செயலாளர் மோனிருல் இஸ்லாம் கான் ஆகியோர் முக்கியக் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டு இருந்தனர்.

இந்த வழக்கின் விசாரணை டாக்காவில் உள்ள பழைய மத்திய சிறைச்சாலையில் தற்காலிக நீதிமன்றம் அமைக்கப்பட்டு அதில் நடந்து வந்தது. இந்த நிலையில் வழக்கின் விசாரணை முடிந்த நிலையில் நீதிபதி அக்தர்ருஸ்மான் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

நீதிபதி அந்தத் தீர்ப்பில் –

ஸியா அறக்கட்டளைக்கு ஆதாரங்கள் இல்லாத வகையில், தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ரூ.28 ஆயிரம் கோடி சொத்துகள் சேர்த்து கலிதா ஸியா ஊழல் செய்தது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது.


மேலும், கலிதா ஜியாவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட ஹாரிஸ் சவுத்ரி, முன்னாள் உதவியாளர் ஜியாவுல் இஸ்லாம் முன்னா, தாக்காவின் முன்னாள் மேயர் சாதீக் ஹுசைன் கோகா, தனிச்செயலாளர் மோனிருல் இஸ்லாம் கான் ஆகியோரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, அவர்களுக்கும் 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. – என்று தெரிவித்தார்.

ஆனால், இந்த வழக்கு அரசியல் பழிவாங்கும் எண்ணத்துடன், காழ்ப்புணர்ச்சியுடன் தொடரப்பட்டுள்ளது என்று வங்கதேச தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. முன்னதாக, இந்த வழக்கின் தீர்ப்பை அறிவிக்கத்தடை கோரி கலிதா ஸியா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இருந்தது. இந்த வழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் கலிதா ஸியா தொடர்பான வழக்கில் தீர்ப்பளிக்க எந்த விதமான தடையும் நீதிமன்றத்துக்கு விதிக்க முடியாது என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir









# ரணிலை கிலி கொள்ள வைத்த 'மை–3 ஒபரேஷன்'

'மிஸ்டர் கிளீன்' என்றும், பொருளாதார 'ஒஸ்தார்' என்றும் வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இன்று அல்ல, இதற்கு முன்னரே மைத்திரி போர்தொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

பிணைமுறிமோசடி விவகாரத்தை மையப்படுத்தி மிஸ்டர் கிளீன் என்ற ரணிலின் நாமத்தை இல்லாதுசெய்தார். அதன்பின்னர் ரணில் தலைமையிலான பொருளாதார சபையையும் கலைத்தார்.

பிரதமராக இருந்த ரணிலுக்கு எதிராகக் கூட்டு எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கும் மைத்திரிதான் பிள்ளையார் சுழிபோட்டார். எனினும், இறுதிநேரத்தில் பின்வாங்கினார்.

காட்டிக்கொடுப்பு, கழுத்தறுப்பு, கைவிரிப்பு, காலைவாருதல், கட்சிதாவுதல் என பச்சோந்தி அரசியலுக்கேஉரியஅனைத்து அம்சங்களும் இலங்கை அரசியலில் ஒரணியில் அரங்கேறியுள்ளன. இதனால் பரபரப்புக்கு பஞ்சமில்லாத வகையில் அரசியல் களமும் சூடுபிடித்துள்ளது.

கூட்டாட்சிக்கு சாவுமணி அடித்து – சமாதி கட்டிவிட்டு, ரணிலுக்கு அதிர்ச்சிவைத்தியம் கொடுப்பதற்காக மஹிந்தவுக்கு மணிமகுடம் சூடியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தான் யாரை சர்வாதிகாரி என்றும் கொடூங்கோல் ஆட்சியாளர் என்றும் விளாசித் தள்ளினாரோ அந்நபருக்கே அதி உயர் பதவியை – அவுதும் இரவோடிரவாக வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவானது அரசியல் இராஜதந்திரமா அல்லது அறியாமையின் உச்சகட்டமா?



அரசியலில் எதுவும் கடந்துபோகும் என்றால், துரோகியையும் மன்னிக்க முடியுமென்றால், விமர்சனங்கள் எல்லாம் வெறும் வார்த்தை ஜாலம் மட்டுமே என்றால், அரசியலை சாக்கடையென கூறுவதைவிட வேறு எப்படி அழைப்பது?

பிறந்த வீட்டுக்கே (சுதந்திரக்கட்சி) துரோகமிழைக்கும் வகையில் 'பல்டி' அடித்த மைத்திரி, புகுந்த வீட்டில் அரசியல் பத்தினியாக வலம்வருவார் என ஐ.தே. கவினர் போட்ட கணக்கு – விட்டுக்கொடுப்பு தான் – இறுதியில் ஆப்பாக மாறியுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.



## ரணிலுக்கு எதிரான தாக்குதல் எப்போது ஆரம்பமானது?

'மிஸ்டர் கிளின்' என்றும், பொருளாதார 'ஒஸ்தார்' என்றும் வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இன்று அல்ல இதற்கு முன்னரே மைத்திரி போர் தொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

பிணைமுறிமோசடி விவகாரத்தை மையப்படுத்தி மிஸ்டர் கிளின் என்ற ரணிலின் நாமத்தை இல்லாதுசெய்தார். அதன்பின்னர் ரணில் தலைமையிலான பொருளாதார சபையையும் கலைத்தார்.

பிரதமராக இருந்த ரணிலுக்கு எதிராகக் கூட்டு எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கும் மைத்திரிதான் பிள்ளையார் சுழிபோட்டார். எனினும், இறுதிநேரத்தில் பின்வாங்கினார்.

உள்ளாட்சித் தேர்தலில் ஐ.தே.கவுக்குப் பெரும் பின்னடைவு ஏற்படுவதற்கும் மைத்திரியினதும், அவர்களின் சகாக்களினதும் அறிவிப்புகளே பிரதான காரணிகளாக அமைந்தன.

அதுமட்டுமல்ல ஐ.தே.கவின் முக்கிய அமைச்சரவைப் பத்திரங்களையும் தனது சகாக்களின் ஒத்துழைப்போடு மைத்திரி நிராகரித்தார். அவ்வாறு நிராகரித்து தன்னை தேசப்பற்றாளர் என்று காட்டிக் கொண்டார்.

சாதகமான முடிவுகள் எடுக்கும்போது அதற்கு தானே தந்தை என்றும், எதிர்ப்புகள் கிளம்பும் பட்சத்தில், அப்படியொரு முடிவை தானே ஊடகங்களில் வாயிலாகத் தான் அறிந்தார் என்றும் மைத்திரி விடுத்த அறிவிப்புகளானவை ஐ.தே.க. மீதான மக்களின் எதிர்ப்பை மேலும் வலுவடையச் செய்தன.

ஐ.தே.க.உறுப்பினர்களிடமிருந்து பதவிகளை பறித்தார். ரவி கருணாநாயக்க, விஜயதாச ராஜபக்ஷ போன்ற மூத்த உறுப்பினர் களை ரணிலிடமிருந்து பிரித்தெடுத்தார்.

இப்படி பல விடயங்களை, சம்பவங்களை பட்டியலிட்டுக்காட்டலாம். இவை ரணிலுக்கு தெரியாமல் இல்லை. தெரிந்தும், புரிந்தும் தெரியாதவர்போலவே அவரும் நடித்தார். கட்சிக்குள்ளேயே தனக்கு கழுத்தறுப்பு நடைபெறுவதால் இறுதிவரை இதுவிடயத்தில் மௌனம் காத்தார்.

ஜனாதிபதி வேட்பாளருக்கு தான் தகுதியற்றவர் என்றால், சஜித் அல்லது கருவை களமிறக்குங்கள் என 2014 ஆம் ஆண்டே ரணில் கூறியிருந்தார். எனினும், மஹிந்த ஆதரவு அலைக்கு அஞ்சி மைத்திரியை பொதுவேட்பாளராக களமிறக்க பலதரப்பும் முடிவெடுத்தன. ரணில் அன்று ஏன் அப்படி சொன்னார் என்பதற்கு இன்று தெளிவான பதில் கிடைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

## ஐ.தே.கவின் பலவீனம்?

மைத்திரியை கௌரவப்படுத்துவதற்காக 19 ஆவது திருத்தச்சட்டத்தில் சில விட்டுக்கொடுப்புகளை செய்தமை.

நூறு நாள்கள் திட்டத்தின் கீழ் முக்கிய விடயங்களை நிறைவேற்ற தவறியமை.

போதிய ஆதாரங்கள் – குற்றச்சாட்டுகள் இருந்தும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காமை. எடுப்பதற்கு தடங்கலாக இருந்து காரணிகளை உடைத்தெறியாமை.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட கையோடு தனியாட்சி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

அரசின் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் பிரசாரம் முன்னெடுக்காமை.

மக்களின் விழிகளுக்கு விளங்கும் வகையிலும் இதயத்துக்கு புரியும் படியும் பொருளாதார திட்டங்கள் அமுல்படுத்தாமை. (பொருள்களின் விலைபோன்றவை)

ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கடையே பரஸ்பர கருத்து மோதல்.

– இப்படி மேலும் பல காரணங்களும் உள்ளன.

இனி என்ன?

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும். அதற்கான ஆதரவு ரணிலிடம் இருக்கின்றபோதிலும் – ஜனாதிபதியை பகைத்துக்கொண்டு எதுவும் செய்யமுடியாது என்பதால் மாகாணசபைத் தேர்தலை நடத்தி மக்களிடம் ஐ.தே.க. கருத்தறியவேண்டும்.

ஐ.தே.க. தனியாட்சி அமைத்தாலும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை



பெறுவது கடினம். அப்படியானால் முக்கிய சட்டங்களை நிறைவேற்ற முடியாது. புதிய அரசமைப்புக்கான நடவடிக்கையும் முடங்கிவிடும்.


எனவே, அனைத்து விடயங்களையும் கருதில் எடுத்து ஐ.தே.க. காத்திரமான முடிவை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இனிவரும் வருடங்களும் ஐ.தே.கவுக்கு அபாய வருடங்களாகவே அமையும்.

ஆர்.சனத்



# பொறுப்புக் கூறுதல் விடயத்துக்கு மதிப்பளிக்கவேண்டும் இலங்கை

## கனேடியத் தூதுவர் வலியுறுத்தல்



கொழும்பு, ஒக்ரோபர் 30

பொறுப்புக் கூறுதல் விவகாரத்துக்கு இலங்கை மதிப்பளிக்கவேண்டும் என்று கனடா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில், நாட்டின் மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் திடமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக நிலைமாறுகால நீதிப் பொறிமுறைமை, குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத நிலையை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் குற்றச் செயல்களுக்குப் பொறுப்புகூறுதல் உள்ளிட்ட காரணிகள் தொடர்பில் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அண்மைக் கால நடவடிக்கைகள் தொடர்பில் கனடா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், ஜனநாயகத்தின் மைல்கல்லான சட்டம் ஒழுங்கு மதிக்கப்படவேண்டும் என்றும், இலங்கையின் அரசமைப்புக்கு மதிப்பளித்து வன்முறைகளில் ஈடுபடுவதை அனைத்துத் தரப்பினரும் தவிர்க்கவேண்டுமெனவும் டேவிட் மெக்கினன் குறிப்பிட்டார். (ஐ)

# எரிபொருள் விநியோகம் நேற்றுத் திடீர் நிறுத்தம்

## அர்ஜுனவை கைது செய்யக் கோரி

நாடு முழுவதுக்குமான எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளதாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலங்கைச் சுதந்திர ஊழியர் சங்கம் நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தது. நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பில், முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி மேற்படி சங்கத்தினரால் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதனால், நாடு முழுவதுக்குமான எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது. எனினும் அர்ஜுன ரணதுங்க நேற்றுக் கைது செய்யப்பட்டமையை அடுத்து பணிப்பகிஷ்கரிப்பை மேற்படி சங்கம் கைவிட்டு பணிக்குத் திரும்பியது. எரிபொருள் விநியோகம் வழமைக்கு வந்தது. (ஐ)

# மின் தாக்கிச் சிறுவன் சாவு!



கொழும்பு, ஒக். 30

சிலாபம் பகுதியில், பெருந்தோட்டக் கம்பனிக்கு சொந்தமான, பலுகஸ்வெவ தோட்டத்தைச் சேர்ந்த, 15 வயதுடைய சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதென, ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவன் தனது குடியிருப்புத் தொகுதிக்குப் பின்னால் நீராடச் சென்றுள்ளார். இதன்போது, பாதுகாப்பற்ற முறையில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளாரென பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம், பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு – வருகின்றனர். (ஐ)

# நாட்டு நிலை குறித்து ஆராய்ந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 30

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகள், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் கட்சி மற்றும் கூட்டிணைவு தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று முன் தினம் மாலை அவசர கூட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தியுள்ளது.

கே.கே.எஸ். வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நேற்று முன் தினம் மாலை இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள், தொண்டர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகள் தொடர்பிலும், இதில் தமிழ்த் தரப்புக்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது..

அதே போன்று விக்கினேஸ்வரன் அண்மையில் புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பிதாக அறிவித்த நிலையில் அந்தக் கட்சி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ-07)

# மைத்திரியின் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கும் ஐ.தே.க.



கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் மாலை ஆற்றிய உரையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மீதும், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மீதும் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் சரியான நிலை, ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்பவற்றை எதிர்வரும் நாள்களில் அறிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

# மஹிந்தானந்த எம்.பிக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 30

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், சம்பத் அபேகோன் நேற்று விடுமுறையில் இருந்தமையால், இந்த வழக்கின் விசாரணையை ஒத்திவைப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

மஹிந்தானந்த அமைச்சராகப் பதவி வகித்த கடந்த ஆட்சி காலகட்டத்தில் சட்டவிரோத முறையில் சம்பாதித்ததாக நம்பப்படும் 2 கோடி 70 இலட்சம் ரூபா செலவில், கொழும்பு – கின்ஸி வீதியிலுள்ள வீடொன்றைக் கொள்வனவு செய்ததன் மூலம், நிதிச் சலவைச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றத்தை செய்துள்ளார் எனக் குற்றம் சுமத்தி சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணிலின் பாதுகாப்பு குறைப்பால் அலரி மாளிகையில் பதற்ற நிலை

கொழும்பு, ஒக். 30

பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை 1008இல் இருந்து ஆகப்பத்தாகக் குறைக்க, பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நேற்று முன்தினம் இரவு உத்தரவிட்டார்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள மேலதிக பாதுகாப்பை விலக்கிக் கொள்ளுமாறும், அவருக்கான பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை, 10 பேராகக் குறைக்குமாறும், பொலிஸ்மா அதிபர், பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமசிங்கவுக்கு உத்தரவிட்டார்.

அவசர கதியில் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்துமாறும், அதுபற்றி தனக்கு அறிவிக்குமாறும் பொலிஸ்மா அதிபர் தனது உத்தரவில் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்ரமசிங்க நீக்கப்பட்டு, புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதனால், ரணில் விக்ரமசிங்கவுக்குப் பிரதமர் பாதுகாப்புப் பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப்படை மூலம் வழங்கப்பட்டுள்ள மேலதிக பாதுகாப்பை நீக்குமாறும், அவருக்கு 10 பாதுகாப்பு அதிகாரிகள் போதும் என்றும் பொலிஸ்மா அதிபர் தனது உத்தரவில் கூறியுள்ளார்.



நாடாளுமன்றம் கூட்டப்படும் வரை ரணில் விக்ரமசிங்கவின் பிரதமருக்கான சிறப்புரிமைகளை உறுதி செய்யுமாறு, ஜனாதிபதிக்கு சபாநாயகர் நேற்று முன்தினம் கடிதம் அனுப்பியிருந்த நிலையிலும் கூடப் பாதுகாப்பைக் குறைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவை அலரி மாளிகையை விட்டு வெளியேற்றப் போவதாகக் கூட்டு எதிரணியினர் மிரட்டி வரும் சூழலில், அவரது பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் தொடர்ந்தும், அலரி மாளிகையில் குவிந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அங்கேயே தங்கியுள்ளனர்.

இதன் மூலம், எந்தவொரு நடவடிக்கையில் இருந்தும் ரணில் விக்ரமசிங்கவைப் பாதுகாக்க அவர்கள் முயற்சித்து வருகின்





# பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்

தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் - பிரான்ஸ் நடத்திய 20 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சாம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்டது.

தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் - பிரான்ஸ் அழைக்கப்பட்ட கல்லூரிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 20 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினரை 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுச் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

# இங்கிலாந்து உதைபந்து அணியின் உரிமையாளர் ஹெலி விபத்தில் சாவு





இங்கிலாந்து லெய்செஸ்டர்சிட்டி அணியின் உரிமையாளர் ஸ்ரீவதனபிரபா ஹெலிக்கொப்டர் விபத்தில் மரணம் அடைந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இங்கிலாந்தில் உள்ள பிரபல உதைபந்து கழகங்களில் ஒன்று லெய் செஸ்டர் சிற்றி.

2015 –16ஆம் ஆண்டு நடந்த பிரிமியர் 'லீக்' போட்டியில் அந்த கழகம் சம்பியன் பட்டம் பெற்றது.

லெய்செஸ்டர் சிற்றி எவ்.சி. அணியின் உரிமையாளர் விச்சை ஸ்ரீவதனபிரபா. தாய்லாந்தைச் சேர்ந்த கோடீஸ்வரரான இவர் 2010ஆம் ஆண்டு அந்த உதை பந்து கழகத்தை வாங்கினார்.

லெய்செஸ்டர்சிற்றி – வெஸ்ட் ஹாம் கழக அணிகள் மோதிய போட்டி நேற்று முன் தினம் நடந்தது. இந்த ஆட்டம் 1–1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிந்தது.

இந்தப் போட்டி முடிந்த சிறிது நேரத்தில் லெய்செஸ்டர் சிற்றி அணியின் உரிமையாளர், கிங்பவர் ஸ்ரேடியத்தில் இருந்து ஹெலிக்கொப்டரில் புறப்பட்டார்.

ஹெலிக்கொப்டர் புறப்பட்ட சில வினாடிகளிலேயே விபத்துக்குள்ளானது. ஸ்ரேடியத்தின் முன்பு உள்ள பார்க்கிங் பகுதியில் ஹெலிக்கொப்டர் விழுந்து வெடித்துத் தீப்பிடித்தது.

இந்த விபத்தில் உதைபந்து கழக உரிமையாளர் விச்சை ஸ்ரீவதன பிரபா பலியானார். அவருடன் மேலும் 4 பேர் பலியானார்கள்.

அந்தக் கழக ஊழியர்களான நுர்சாரா சுக்நமாமி, கேவேபோர்ன், விமானி எரிக்சுவாபர், அவரது உதவியாளர் இசபெல்லா ரோசா ஆகியோரும் இறந்தனர்.

ஹெலிக்கொப்டர் வெடித்து சிதறியதில் ஸ்ரேடியம் முன்பு நெருப்பு கோளம் ஏற்பட்டது. போட்டியைப் பார்த்து விட்டு வெளியே சென்று கொண்டு இருந்த உதைபந்து ரசிகர்கள் இதை பார்த்து பீதி அடைந்து ஓடினார்கள். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

ஹெலிக்கொப்டரில் உள்ள விசிறியில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதுகுறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

உலகின் சிறந்த மனிதனை இழந்து விட்டதாக அந்த கழகம் தனது உரிமையாளர் மரணம் தொடர்பாக தெரிவித்துள்ளது.



# ஜுவாண்டஸ் அசத்தல் வெற்றி

இத்தாலிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், எம்போலி அணியின் மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் பின்தங்கியிருந்த ஜுவான்டஸ், தமது நட்சத்திர முன்கள வீரர் கிறிஸ்டியாடியானோ ரொனால்டோ பெற்ற இரண்டு கோல்களால் வென்றது.

இப்போட்டிக்கான ஆரம்ப அணியில் இடம்பெற்றிருந்த ஜுவான்டஸின் அணித்தலைவர் ஜோர்ஜியோ செலினி, போட்டிக்கு முன்பான தயார்ப்படுத்தல் பயிற்சியின்போது பிரச்சினையொன்றுக்கு உள்ளானதைத் தொடர்ந்து டானியல் றூகனி அணியில் பிரதியீடு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மைதானத்தின் நடுப்பகுதியிலிருந்து ஓடிவந்த எம்போலியின் மத்தியகள வீரர் ஆவ்ரி ஆனா மேற்கொண்ட பந்துப்பரிமாற்றம், ஜுவான்டஸின் றொட்றிகோ பென்டாக்கூரில் பட்டு எம்போலியின் பிரான்ஸெஸ்கோ கப்புட்டோவின் பாதையில் வர, அவர் அதைப் போட்டியின் 28ஆவது நிமிடத்தில் கோலாக்க, இப்பருவகாலத்தில் முதற்தடவையாக முதற்பாதியில் ஜுவான்டஸ் பின்தங்க வேண்டி ஏற்பட்டது.

எனினும், இரண்டாவது பாதியில் ஜுவான்டஸ் மீண்டு வந்த நிலையில், அவ்வணியின் மிரலெம் பிஜானிக் கோல் கம்பத்தை நோக்கி உதைத்த உதையொன்று கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியிருந்தது. பின்னர், எம்போலி அணியின் இஸ்மாயில் பெனாசீர், ஜுவான்டஸின் போலோ டிபாலாவிடம் தமது பகுதிக்குள் வைத்து பந்தை இழந்ததுடன், இருவரும் வீழ்ந்த நிலையில் வழங்கப்பட்ட பெனால்டியை போட்டியின் 54ஆவது நிமிடத்தில் றொனால்டோ கோலாக்க கோல் எண்ணிக்கையை ஜுவான்டஸ் சமப்படுத்தியது.

பின்னர், அடுத்த 16 நிமிடங்களில் பெனால்டி எல்லைப் பகுதிக்கு வெளியே பந்துப் பரிமாற்றமொன்றைப் பெற்ற றொனால்டோ, 25 மீற்றர்கள் தூரத்திலிருந்து பெற்ற அபாரமான கோலோடு இறுதியில் 2–1 என்ற கோல் கணக்கில் ஜுவான்டஸ் வென்றது.

# 9ஆவது முறையாக மகுடம் சூடினார் ரோஜர் பெடரர்



சுவிஸர்லாந்தில் நடைபெற்று வந்த ஆண்களுக்கே உரித்தான சுவிஸ் இண்டோஸ் டென்னிஸ் விளையாட்டு தொடர், இனிதே நிறைவு பெற்றுள்ளது.

கடந்த 22ஆம் திகதி ஆரம்பமான இத்தொடர், நேற்று முன் தினம் நிறைவுக்கு வந்தது. 48 வருடங்கள் பழமையான இத்தொடர், கடினத்தரையில் நடைபெறும் ஓர் தொடராகும்.

இந்த தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில், சுவிஸர்லாந்தின் முன்னணி வீரரான ரோஜர் பெடரர், ஒன்பதாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

சரி தற்போது ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு, இறுதிப் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு, இறுதிப் போட்டியில், சுவிஸர்லாந்தின் முன்னணி வீரரான றொஜர் பெடரர், ரோமேனியாவின் மாரிஸ் கோப்பிளுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

இரசிகர்களின் உற்சாக கரகோஷத்திற்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றே விறுவிறுப்பாக நடைபெற்றது.

இதில் இரு வீரர்களும் விட்டுக்கொடுக்காமல் ஆக்ரோமாக விளையாடினர். டை பிரேக் வரை நீடித்த இந்த செற்றில் 7–6 என பெடரர் முதல் செற்றைக் கைப்பற்றினார்.

இதனைதொடர்ந்து, நடைபெற்ற இரண்டாவது செற்றில், இரு வீரர்களும் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கினர்.

இந்த பரபரப்பான செட்டில், மாரிஸ் கோப்பிள், பெடரருக்கு கடும் நெருக்கடி கொடுத்தாலும் இதனை திறம்பட சமாளித்த பெடரர், 6–4 என செற்றைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்.

இது பெடரர், இத்தொடரில் பெற்றுக்கொள்ளும் 9ஆவது சம்பியன் பட்டமாகும். இதற்கு முன்னதாக பெடரர் 2006, 2007, 2008, 2010, 2011, 2014, 2015, 2017ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டங்கள் வென்றுள்ளார். இது தவிர 2000, 2001, 2009, 2012, 2013 ஆண்டுகளில் இரண்டாம் இடமும் பிடித்துள்ளார்.

37 வயதான ரோஜர் பெடரர், இந்த சம்பியன் பட்டத்தை வெற்றிக்கொண்டதன் மூலம் டென்னிஸ் உலகில் 99 சம்பியன் பட்டங்கள் வென்று சாதனைப் படைத்துள்ளார்.

## சர்வாதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நல்லாட்சி அரசில் மனித உரிமைகளைப் பாதுகாக்கப்பட்டு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் நாட்டில் நிறைவேற்று அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஒருவரைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தில் அரசமைப்புத் திருத்தத்தின் 42(4) சரத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறக் கூடிய அமைச்சர் ஒருவரையே நியமிக்கவேண்டும். இருப்பினும் மஹிந்தவின் நியமனம் அரசமைப்புக்கு முரணானதாகும்.

இன்று ஜனாதிபதி, சிறு பிள்ளைகளால்கூட நம்ப முடியாத கருத்துக்களை வெளியிடுகின்றார். வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கவில்லை.

அத்துடன் அரச ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலம், ஊடக சுதந்திரத்தைக் கண்டுகொள்ள முடியுமாக இருக்கின்றது.

ஆகவே குறுகிய அரசியல் வாதங்களில் இருந்து விலகி இலங்கையின் எதிர்காலத்திற்காக ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன் – என்றார். (ஐ)

## வசந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கிய அவர், நேற்று முன்தினம் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பி ரணிலைச் சந்தித்தார்.

இந்நிலையில், நேற்று மீண்டும் மஹிந்த பக்கம் தாவிய வசந்த சேனநாயக்கவுக்கு சுற்றுலாத்துறைமற்றும்வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை வழங்கினார் மைத்திரி. (ஐ)

## நாடாளுமன்றை உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதில் இன்னும் கையெழுத்திடவில்லை எனத் தெரியவருகிறது. அதனால் இந்த 126 எம்.பிக்களின் எண்ணிக்கை தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இப்படிக் கடிதங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று காலை நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் அவசரக் கூட்டத்தைச் சபாநாயகர் கூட்டுகிறார்.

இன்று முற்பகல் 11 மணிக்கு இது இடம்பெறும் என்று சபாநாயகர் கருஜயசூரிய அறிவித்துள்ளார்.

இதற்கான அழைப்பை அவர் சகல கட்சிகளின் தலைவர்களுக்கும் நேற்றுத் திங்கட்கிழமை மாலை அனுப்பிவைத்தார் என்று சபாநாயகர் அலுவலகம் தெரிவித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து கடந்த சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 16ஆம் திகதிவரை நாடாளுமன்றை ஜனாதிபதி ஒத்திவைத்தார்.

அரசமைப்புக்கு முரணாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி நீக்கினார் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியது. இந்த நிலையில் நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிப்பவருக்குப் பிரதமர் பதவியைத் தொடர அனுமதிக்கக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி என்பன வலியுறுத்தின.

அத்துடன், அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தன.

இந்த நிலையில் நாடாளுமன்றைக் கூட்டுவதற்கான ஏது நிலை தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் சபாநாயகர் இன்று விவாதிக்க உள்ளார். (ஐ)

## நேரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இராஜாங்கத்திணைக்களம் அறிக்கையூடாக அழுத்தம் கொடுத்திருந்த நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்க, ஐ.நா. இராஜதந்திரிகள் நேற்றுச் சபாநாயகர் கருஜயசூரியவை அவசரமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பதில் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஹில்டனும் ஐ.நா தூதரக உயர் அதிகாரி ஒருவரும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, அமெரிக்க அதிகாரிகள், தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து கவலை தெரிவித்தனர் என்றும், விரைவாகப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினர் என்றும் சபாநாயகரின் செயலகம் தெரிவித்துள்ளது. ஐ.நா உயர் அதிகாரியும் அதே உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். (ஐ)

## அரசமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அரசைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக, ஐ.நா பொதுச் செயலரின் பேச்சாளர், ஸ்டீபன் டுஜாரிக் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பிந்திய நிலைவரங்களை, ஐ.நா பொதுச்செயலர் பாரிய கரிசனையுடன் கவனித்து வருகிறார்.

ஜனநாயகப் பெறுமானங்களை மதிக்குமாறும், அரசமைப்பு விதிகளையும், செயல்முறைகளையும் பின்பற்றுமாறும், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தி, அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் இலங்கை அரசை அவர் கோருகிறார்.

அனைத்துத் தரப்பினரும், கட்டுப்பாட்டுடனும், நெருக்கடியான நிலைக்கு அமைதியான முறையில் தீர்வு காணுமாறும் அவர் கோருகிறார் என்று அதில் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடைபெறவுள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வியாழேந்திரன், துரைரட்ணசிங்கம் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ளமையால் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கமாட்டார்கள். (ஐ-07)

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஹீதர் நுவேட் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைவரங்களை அமெரிக்கா தொடர்ந்தும் கரிசனையுடன் கவனித்து வருகின்றது.

நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சபாநாயகருக்கு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.

யார் அரசுக்குத் தலைமையேற்பது என்பதை உறுதி செய்யும் பொறுப்புக்களை நிறைவேற்ற, இலங்கை மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அனுமதிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## பிரதமராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை ஜனாதிபதியாக இரு தடவைகள் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ, மூன்று தசாப்தகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்ததால் சர்வதேச அளவில் பேசப்பட்ட தலைவராக காணப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவருக்கு தோட்டத்தொழில்கள் இராஜாங்க அமைச்சுப் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தனது ஆதரவைத் தெரிவிப்பதாக உறுதியளித்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று முற்பகல் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தனது ஆதரவு என்றும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே என்று உறுதியளித்தார்.

இந்த நிலையில் நேற்று இரவு மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ பக்கம் வந்த அவர், தோட்டத் தொழில்கள் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார்.

முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்கவும் இதேபோன்ற ஆட்டத்தை முன்னெடுத்து அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்றார். (ஐ)

## ஒருங்கிணைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வேண்டும். இதனைக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் தெரிவியுங்கள்."

–இவ்வாறு ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா நேற்றிரவு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து வலியுறுத்தினார்.

''இந்த விடயம் குறித்து நாடாளுமன்றக் குழுவைக் கூட்டி ஆராயலாம். அதில் தப்பில்லை. ஆனால் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் உயர்பீடமான ஒருங்கிணைப்புக் குழுவிலேயே இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என நான் வற்புறுத்தினேன். மாவை சேனாதிராசாவும் அதனை ஏற்றுக் கொண்டார்."

– என்று ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

## நாடாளுமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க எம்.பி. நேற்றுக் கடிதம் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில், ஜே.வி.பியும் நேற்றுக் கடிதம் மூலம் கோரியுள்ளது. (ஐ)

## வீட்டுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டமையுடன் அவர்கள் மீது வாள் வெட்டினையும் நடத்தினார். இதனால் ஒருவர் உயிரிழந்தார்; மூவர் படுகாயமடைந்தனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை மாளிகைத்திடல் கிராமத்தில் நேற்று அதிகாலை 12 மணி முதல் 4 மணி வரையிலான நேரப் பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று உள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் அதிகாலை 12 மணியளவில் புகுந்த தாக்குதலாளி வீட்டில் உறக்கத்தில் இருந்த பரம்சோதி ஜெயஸ்ரீ (வயது 66) என்பவர் மீதும் அவரது மனைவி ப.நிர்மலாதேவி (வயது53) என்பவர்மீது தாக்குதல் மேற்கொண்டு வாள்வெட்டை நடத்தினார். அதில் பரம்சோதி உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இருந்த அறை ஒன்றில் தூங்கிக்கொண்டு இருந்த அவர்களது மகன் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வீட்டில் தாக்குதல் மேற்கொண்ட பின்னர் சிறிது நேரம் கழித்து அந்தத் தாக்குதலாளி அங்கிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள தனது மாமனார் வீட்டுக்குள் (மனைவியின் தந்தை) வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தனது மாமனார் மற்றும் மாமியார் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்கள் மீதும் வாள் வெட்டை மேற்கொண்டுள்ளார்.

அதில் எம். சித்திரவடிவேல் (வயது 50), அவரது மனைவி சி. ஜெயந்தி (வயது 40) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனது மாமியார் மீது வாள் வெட்டு நடத்திய பின்னர் பெட்சீற்றால் அவரது முகத்தை மூடிக் கட்டி வீட்டில் இருந்து சுமார் 20 மீற்றர் தூரத்துக்கு நிலத்தில் இழுத்து சென்று அருகில் இருந்த காணிக்குள் அவரைக் கைவிட்டுச் சென்றுள்ளார்.

அதேவேளை, வீட்டில் இருந்த அறையில் தூங்கிக்கொண்டு இருந்த தனது மனைவி மற்றும் பிள்ளை மீது எவ்வித தாக்குதலையும் தாக்குதலாளி மேற்கொள்ளவில்லை.

அங்கிருந்து சென்ற தாக்குதலாளி பின்னர் அப்பகுதிகளில் நடமாடி திரிந்தவேளை அயலவர்கள் மின்குமிழ்களை ஒளிர விட்டபோது சிங்களத்தில் பேசி மின்குமிழ்களை அணைக்குமாறு கூறியுள்ளார். அயலவர்கள் இராணுவம் அல்லது பொலிஸாராக இருக்கலாம் என்னும் சந்தேகத்தில் மின்குமிழ்களை அணைத்து உள்ளனர்.

பின்னர் அதிகாலை 4 மணியளவில் இறுதியாகத் தாக்குதல் நடத்திய வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள வீடொன்றுக்குள் தாக்குதல் நடத்தும் நோக்குடன் தாக்குதலாளி புகுந்த வேளை வீட்டார் விழிப்பாக இருந்ததால் அவரை அடையாளம் கண்டு விசாரிக்க முற்பட்டவேளை தாக்குதலாளி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அதன் பின்னரே அயலில் உள்ள வீடுகளில் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றமை அயலவர்களுக்குத் தெரியவந்துள்ளது. அதன் பின்னர் தாக்குதலுக்கு இலக்கானவர்களை அயலவர்கள் மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

தாக்குதலாளி அப்பகுதியைச் சேர்ந்த தர்சன் என்னும் நபர் எனவும், தாக்குதலுக்கு இலக்கான சித்திர வடிவேல் என்பவரின் மகளைத் திருமணம் முடித்து அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது எனவும், தாக்குதலாளி போதைப் பாவனைக்கு அடிமையானவர் என்பதால் வீட்டில் குடும்பத் தகராறு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தாக்குதலாளி தாக்குதல் மேற்கொள்ளும்போது போதைப் பொருள் பாவித்த நிலையில் காணப்பட்டார் எனவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அதிகாலை 4 மணியளவிலேயே பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியபோதிலும் பொலிஸார் காலை 8 மணிக்குப் பிறகே சம்பவ இடத்திற்கு வருகை தந்தனர் என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொலிஸார் விரைந்து வந்திருந்தால் தாக்குதலாளியைக் கைது செய்திருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

## அர்ஜுன..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் அவரை 5 லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், ஒருவர் உயிரிழந்தமையோடு, மேலும் இருவர் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பிலேயே ரணதுங்க கைதுசெய்யப்பட்டார்.

கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு, பெற்றோலிய வளத்துறை முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, நேற்று முன்தினம் மாலை சென்றிருந்தபோது, அங்கிருந்த மஹிந்த அணி ஆதரவு ஊழியர்களுக்கும் முன்னாள் அமைச்சருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து, முன்னாள் அமைச்சரின் பாதுகாவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானமையுடன், மேலும் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலங்கை சுதந்திரத் தொழிலாளர் சங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவைக் கைதுசெய்யும் வரை பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்று அறிவித்திருந்தது.

இதேவேளை, மஹிந்த பிரதமரான அதிருப்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனி அணி அமைக்கும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுள்ளார் எனவும், அர்ஜுன ரணதுங்க (சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய சகா) கைதுக்கு அதுவும் ஒரு காரணம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

## அலரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாளிகைக்குச் சென்ற ரவி கருணாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார்.

இதேவேளை, ரவி கருணாநாயக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளார் என்றும், அவருக்கு நிதியமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது என்றும் கடந்த சில தினங்களாக வெளிவரும் செய்திகளுக்கு மத்தியில், ரவி நேற்று ரணிலைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# நேற்று மாலை அமைச்சரவை பதவியேற்பு



## வடிவேல் சுரேஷின் குத்துக்கரணங்கள்



ஐ.தே.கவின் எம்.பியான வடிவேல் சுரேஷ் நேற்று முன்தினம் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தார். நேற்றுக்காலையில் அலரி மாளிகையில் ரணிலைச் சந்தித்து அவரை ஆதரிக்கிறார் எனக் கூறினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. மீண்டும் நேற்று மாலை மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அவர் இணைந்து கொண்டார்.

# அரசியலில் தலையிடோம் என ரணிலுக்குச் சீனா உத்தரவாதம்

இலங்கையின் அரசியல் நெருக்கடிகளில், தாம் தலையீடு செய்யமாட்டோம் என்று சீனா தமக்கு உத்தரவாதம் அளித்துள்ளது என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க மஹிந்த ராஜபக்ஷவுக்கு சீனா நிதி அளிக்கிறது என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம்சாட்டியிருந்தார்.

இது குறித்து அலரி மாளிகையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியபோது, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாகப் பதிலளிக்க மறுத்துள்ளார்.

எனினும், சீனத் தூதுவர் தன்னைச் சந்தித்தபோது, சீனா இதில் தலையீடு செய்யாது என்று உறுதியளித்தார் என்றும் அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை சீனத் தூதுவர் வந்து சந்தித்தபோது, அரசியல் நெருக்கடிகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது என்று அவர் உறுதி அளித்தார்.

பெரும்பாலான வெளிநாட்டு இராஜதந்திரிகள் உடனடியாக நாடாளுமன்றம் கூட்டப்பட்டு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றே கருதுகின்றனர் என்றும் அவர் கூறினார். (ஐ)



திஸ்ஸமஹாராம, சந்தகிரிகொட வயல்வெளியில் நேற்று இடம்பெற்ற தேசிய ஏர்பூட்டு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். (ஐ)




Rube Since 1982 Jewellery

ரூபி ஜுவல்லறி

தங்க நகை உலகில் 36 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின்பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். நகரிலோ இலங்கையில் வேறு எப்பாகத்திலோ எமக்கு வேறு கிளைகள் கிடையா.

சிங்கப்பூர் தரத்திலான 916 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 6919
0777 344 074

RUBE JEWELLERS


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.